# கயிற்றின் மீது ஒரு நடனம்









அபர்ணா சிந்தூர்... இன்றைய டிரெண்டின் பரதநாட்டியக் கலைஞர். மாற்றி யோசி! இதுதான் இவருடைய நோக்கம். பரதத்தில் புதுமையைப் புகுத்தி எல்லா தரப்பு மக்களும் ரசிக்கவேண்டும் என்பதில் தீர்மானமாக இருக்கிறார். கயிற்றில் நடனம். நடனத்தில் கதை சொல்வது என்று இந்தப் புது விஷயங்களைப் பற்றி. அமெரிக்காவிலிருந்து சமீபத்தில் சென்னை வந்திருந்தவரிடம் பேசினோம்!

``பரத நாட்டியம் என்றால் இப்படித்தான் இருக்கனும்னு இங்கே சில கட்டுப்பாடுகள் இருக்கு... நான் பரதத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துட்டுப் போக முயற்சி பண்றேன். பரதத்தில் ஒரு கதை சொல்வதுதான் என்னுடைய டான்ஸ் ஸ்டைல்... இந்தக் கதைகள் கடவுள் பற்றிய ஆன்மிகக் கதைகள் கிடையாது... ஒவ்வொரு நாளும் நாம பார்த்துக் கிட்டிருக்கிற சராசரி மனிதனுடைய குறிப்பாக பெண்களின் கதையைத்தான் சொல்றோம். தினசரி வாழ்க்கையில் என்னைப் பாதிக்கிற சம்பவங்களுக்கு கதை. திரைக்கதை எழுதி நடனம் அமைச்சிருக்கோம்.`` என்று சொல்லும் அபர்ணா கயிற்றில் தொங்கியபடியே நடனமாடும் புது யுக்தியையும் கையாள்கிறார். ஏ.கே.ராமானுஜத்தின் மொழிபெயர்ப்புக் கதைகள் மற்றும் பாரதியார் பாடல்களுக்கும் நடனம் அமைக்கிறார்.



**சரியான பேலன்ஸ் வர தினமும் பத்து மணிநேர பயிற்சி தேவை**







கயிற்றில் தொங்கியபடி எப்படி நடனமாட முடியுது?

``மேடையில் கயிற்றில் தொங்கியபடி ஆடும் நடனத்தைப் பார்க்கும்போது பிரமாண்டமாகவும் பிரமிப்பாகவும் இருக்கும். இப்படி நடனமாட நிறைய பயிற்சி தேவை. சரியான பேலன்ஸ் வருவதற்கு தினமும் பத்துமணி நேரமாவது பயிற்சி எடுக்க வேண்டியிருக்கும். இதைத் தவிர, நடனக் கலைஞர்களுக்கு லைட்டான மேக்கப். சிம்பிளான காட்டன் ஆடைகள். மென்மையான முகபாவங்கள் என பரதத்துக்கு ஒரு புது லுக் கொடுக்க முயற்சி பண்ணிக் கிட்டிருக்கோம்.

இந்தப் புதுமையான முயற்சிகள் சினிமாப் பாடல்களில் தொடர்ந்தால் சூப்பரா இருக்கும். இன்றைய சினிமா டான்ஸ்களைப் பார்க்கும்போது ஒரு பாடலுக்கும் இன்னொரு பாடலுக்கும் வித்தியாசமே தெரியலை. எல்லாத்துலேயும் ஒரே மாதிரி குதிச்சுக்கிட்டிருக்காங்க. சந்தோஷ் சிவன் இயக்கிய ஆனந்தபத்ரம் என்ற மலையாள படத்துக்குப் புதுமையாக நடனம் அமைக்கும் வாய்ப்புக் கிடைத்தது! ரவிவர்மாவின் ஓவியங்களை அடிப்படையாக வைத்த தெளிவான முகபாவங்கள். நளினமான உடல் அசைவுகள் மட்டும் கொண்டு ஒரு காதல் பாடலுக்கு நடனம் அமைச்சிருந்தேன். இந்த மாதிரி வித்தியாசமான முயற்சிகளில் மட்டுமே பணிபுரிய ஆசை.`` என்கிறார் இந்த வித்தியாச நடனக் கலைஞர்.●




- ஜனை

படம்: சித்ராமன